# ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தல்

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்
## 2015 நான்காம் காலாண்டு மற்றும் வருடாந்தம்


**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு**

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2147072 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


……………………………………………………………………………………………………..

இலங்கை, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2015 நான்காம் காலாண்டு மற்றும் வருடாந்தம் தேசிய கணக்குகள் மதிப்பீடுகளை வெளியிடுகிறது.

2015 நான்காம் காலாண்டு மற்றும் வருடாந்த தேசிய கணக்குகள் மதிப்பீடுகளை பரப்பாக்கம் செய்வதற்காக, ஊடகங்களை தெளிவுபடுத்த நடைபெறுகின்றது. நிலையான விலைகளில் குறிப்பிட்டால், இலங்கையின் 2015 ஆம் ஆண்டிற்கான (தை தொடக்கம் மார்கழி) மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 8,622,825 மில்லியனை அடைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி ரூபா 8,228,986 மில்லியனை பதிவு செய்து 2015 ஆம் ஆண்டில் 4.8 சதவீத நேர் வளர்ச்சியை எட்டியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் பல நிலைகளில் மதிப்பிடப்படுகின்றது. இம்மதிப்பீடுகள், கிடைக்கப்பெறும் தரவுகளிற்கேற்ப ஒவ்வொரு நிலைகளிலும் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு நிலைகளிலும் இம்மதிப்பீடுகள் மேன்மேலும் தற்காலிக, திருத்திய மற்றும் இறுதி மதிப்பீடுகள் என முடிவு செய்யப்படுகிறது. இறுதி மதிப்பீடுகள் மேலதிக மாற்றங்களுக்கு உட்படுத்தப்படாது. அதன்படி நாட்டின், 2014 ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதம் 4.5 இலிருந்து 4.9 சதவீதமாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி நடப்பு விலைகளில் ரூபா 11,183,220 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நிலையான விலைகளில் (2010) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்களிப்பினை முறையே 7.9 சதவீதம், 26.2 சதவீதம், 56.6 சதவீதம் மற்றும் 9.3 சதவீதமாக பதிவு செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டின் முழுக் காலப் பகுதியில், பொருளாதாரத்தின் மூன்று பிரதான நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு வளர்ச்சி வீத விரிவாக்கத்தைக் காட்டுகிறது. அதாவது விவசாயம் 5.5 சதவீதத்தையும், கைத்தொழில் 3.0 சதவீதத்தையும், சேவைகள் 5.3 சதவீதவளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், ‘நெல் வளர்ச்சி’, ‘மரக்கறி வளர்ச்சி’ என்பன மிக உயர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளது: அவை முறையே 23.3 , 24.9 சதவீதங்களாகும். அத்துடன் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ‘கால்நடை

உற்பத்தி ' மற்றும் 'எண்ணைய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக ' முறையே 8.0 , 5.1 சதவீத வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளது, இவ்வேளையில் 'தேயிலை வளர்ச்சியும்', 'கடல் மீன்பிடியும்' மிகச் சிறிய வீழ்ச்சி வீதத்தை எதிர்கொள்வதுடன் இந்த இரண்டு பொருளாதார நடவடிக்கைகளும் முறையே -2.6, -1.5 சதவீதமான வளர்ச்சி வீதத்தை 2015 ஆம் காலப் பகுதியில் காட்டுகிறது.

கைத்தொழில் துறைகளுக்கிடையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர் பங்குடன் ஒப்பிடும் போது, உப பிரிவுகளான 'உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி ', 'இறப்பர் பொருட்கள் உற்பத்தி','தளபாட உற்பத்தி' மற்றும்' மின்வலு,வாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல்' என்பன முறையே 5.6 சதவீத, 4.7 சதவீத, 6.7 சதவீத மற்றும் 7.8 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களை 2015 ஆம் காலப் பகுதியில் காட்டுகின்றன. மேலும் இக்காலப் பகுதியை நோக்கும் போது 'சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்' மற்றும் 'கட்டடவாக்கம்' ஆகிய இரண்டு துறைகளும் 0.9 சதவீத வீழ்ச்சியை பதிவு செய்கிறது

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளான, 'IT திட்ட செயலாக்க ஆலோசனை மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள்', 'நிதிச் சேவை நடவடிக்கைகள்' ' மற்றும் 'மெய் ஆதன நடவடிக்கைகள்' என்பன குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை, முறையே 21.1 சதவீத, 15.8 சதவீத மற்றும் 9.6 சதவீதங்களை முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இம்முறை பதிவு செய்துள்ளது.

ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தலில், 2015 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நிலையான விலைகளில் ரூபா **2,387,136** மில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடும் போது **2.5** சதவீத வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்ததென வெளியிடப்படுகிறது. 2015 ஆம் ஆண்டின் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்கள் முறையே 4.4 சதவீத, 7.0 சதவீத மற்றும் 5.6 சதவீதங்களாக பதிவு செய்கிறது. 2015 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுப் பகுதியில், விவசாய நடவடிக்கைகள் 0.5 சதவீதத்தால் மிகச் சிறிய வீழ்ச்சியை பதிவு செய்கிறது. இவ்வேளையில் கைத்தொழில், சேவைத் துறைகள் முறையே 1.9 சதவீத , 2.7 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்கின்றன.

2015 ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
**பணிப்பாளர் நாயகம்**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

---

***இந்த ஊடக அறிக்கையை 2016 மார்ச் 15 ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் பிரசுரிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்க.***